சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குு.சா. 01 திரு. பார்த்திபன் த /பெ வரதராஜ் , வயது 38 .

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .–

எனது சொந்த ஊர் கதிரி மங்கலமாகும். எதிரி வாணியம்பாடியை சேர்ந்தவர் அவர். எனக்கும் எதிர்க்கும் எவ்வாறு பழக்கம் என்றால் நானும் அவரும் ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் ஒன்றாக பணியாற்றியதால் பழக்கம் ஏற்பட்டது. நானும் எதிரியும் ஒன்றாக நான்கு வருடங்கள் பணியாற்றினோம். எதிரியின் முழு முகவரி எனக்கு தெரியும். ஸ்ரீராம் பைனான்ஸில் நான் பணியாற்றுவது தவற வேறு தொழில் செய்து வருகிறேன் என்றால் ஊதுவத்தி கம்பனி நடத்தி வருகிறேன். நான் பைனான்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வந்ததால் ஒரு குறிப்பிட்ட பணத்திற்கு மேல் ரொக்கமாக வழங்க இயலாது என்றும் வங்கி பரிவர்த்தனை மூலமாகத்தான் பணத்தை வழங்க இயலும் என்றும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இரண்டு வங்கி கணக்குகள் பராமரித்து வருகிறேன். நான் ஹெச்டிஎஃப்சி மற்றும் இந்தியன் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். எந்த தேதியில் எதிரிய என்னிடம் பணம் கேட்டார் என்றும் எப்போது பணம் பெற்றார் என்றும் நான் குறிப்பிட்டு புகாரிலோ சத்தியபிரமான வாக்குமூலத்திலோ சட்ட அறிவிப்பிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சீட்டு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். சீட்டு நடத்துவதற்கு நான் அரசாங்கத்தால் அனுமதி பெற்றுள்ளேன் என்றால் இல்லை. நான் சீட்டு நடத்தும் போது அதற்கு ஈடாக பிராமிஸ்வரி நோட்டு மற்றும் காசோலையை வாங்கி வைப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிரி என்னிடம் இரண்டு சீட்டில் சேர்ந்து இருந்தார் என்றால் சரியல்ல ஒரு சீட்டில் மட்டுமே சேர்ந்து இருந்தார் அந்த சீட்டு முடிந்து

விட்டது. எதிரிக்கு வங்கி மூலமாக நான் பணம் அனுப்பினேனா என்றால் இல்லை ரொக்கமாக கொடுத்தேன். வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தேனா என்றால் இல்லை ஸ்ரீராம் பைனான்ஸில் நான் வேலை செய்த போது எனக்கு வந்த பணத்தை வைத்து எதிரிக்கு கொடுத்தேன். ஸ்ரீராம் பைனான்ஸில் நான் பணியாற்றிய போது எனக்கு கிடைத்த செட்டில்மெண்ட் பணம் வங்கியில் தான் செலுத்தினார்கள் என்றால் சரிதான். ஸ்ரீராம் பைனான்ஸ் செட்டில்மெண்ட் பணமானது எனக்கு 2021 ஆம் வருடம் கிடைக்கப்பெற்றது. வங்கியில் இருந்து பணத்தை எடுத்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் நான் வேண்டுமென்றே வழக்கிற்காக ரொக்கமாக கொடுத்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் மீது ரூபாய் இரண்டு லட்சத்திற்கு பிராமிசரி நோட்டு சிவில் வழக்கு திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் மூலமாகத்தான் எதிரியின் கணவர் எனக்கு அறிமுகம் என்றால் சரிதான். எதிரி எனக்கு எவ்விதமான காசோலை கொடுக்கவில்லை என்றாலும் எதிரியின் காசோலை நான் தான் பூர்த்தி செய்து அவரது கையொப்பத்தை இட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் நடத்தி வரும் சீட்டில் எதிரி ஒரு உறுப்பினராக இருந்ததால் அதற்கு ஈடாக கொடுத்த காசோலை மற்றும் பிராமிசரி நோட்டை தவறுதலாக பயன்படுத்தி எதிரியின் கையொப்பத்தை நானே இட்டு மோசடியாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும் எனவே எதிரி எனக்கு காசோலை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சீட்டு நடத்தும் போது ஈடாக கொடுத்த காசோலை நான் தவறாக பயன்படுத்தி மோசடியாக இவ்வாறு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியோடது அல்ல என்றாலும் அந்த கையொப்பத்தை நானே இட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்தை ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.